# அன்பின் உதாரகுணம்

*இயேசுவுக்கென்று மனமாற்றம் அடைந்தவர்களிடத்தில் மற்ற எல்லா மனிதர்களிடத்திலும் உதாரகுணமும் அக்கறையும் காட்டுதல் என்பது பெரிதும் விளைந்த புதிய மாற்றமாய் இருந்தது. யூதர்கள் தங்களின் எபிரெய இனத்திற்குள்ளாக ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்ளும்படியாகப் போதிக்கப் பட்டிருந்தார்கள், ஆனால் புறஜாதியாரைப் பற்றிய அவர்களது எண்ணப் போக்கானது அவர்களின் விருப்பத்திற்கு விட்டு விடப்பட்டதாய் இருந்தது. அடிபட்ட யூத மனிதனிடத்தில் சமாரியனின் உதாரகுணமுள்ள செயல்பாடுகள் பற்றிய இயேசு வின் உவமையானது (லூக். 10:25-37) யூதர்கள் மற்ற இனத்தார் மீது கொண்டிருந்த எண்ணத்தைப் பிரதிபலிக்கின்றது.*

*புறஜாதியார் மனித வாழ்வு பற்றி சிறிதளவே அக்கறை யுடையவர்களாய் இருந்தார்கள். அவர்களின் விக்கிரகாரா தனையானது எவ்வளவு அதிகமாய் தெய்வச் சார்புடையதன்றி யிருந்தோ, அவ்வளவு குறைவாகவே அவர்கள் மனித வாழ்வை மதித்தார்கள். பல்வகைப்பட்ட புறஜாதிக் கலாச்சாரங்களில் அவர்கள் தங்களின் பிள்ளைகளை விக்கிரகங்களுக்குப் பலியிட்டார்கள், விலங்குகளை வணங்கினார்கள், வான் பொருட்களை ஆராதித்தார்கள், நதிகளையும் மலைகளையும் மகிமைப்படுத்தினார்கள். இந்தப் பொய்யான ஆராதனை முறைமைகள் யாவும், மெய்யான ஒரே தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதன் மீது அவர்கள் கொள்ள வேண்டிய மதிப்பை மிகவும் குறைத்தன.*

*கிறிஸ்தவர்களின் அடையாளமாக விளங்கும் ஒரு புதிய கட்டளையை யூதர்களுக்குக் கொடுத்ததன் மூலம் இயேசு அவர்கள் சிறந்த எண்ணப் போக்கை ஏற்படுத்திக் கொள்ளும் படியாக அறைகூவல் விடுத்தார்: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" (யோவா. 13:34, 35). அவர்கள் சர்வவல்லவர் மீது அன்பாயிருப்பதற்கு அடுத்து தங்கள் அயலாரிடத்திலும் அன்பாயிருக்க வேண்டும் என்று கட்டளையிட்டார் (மத். 22:37-39). அவர்கள் தங்கள் விரோதிகள் மேலும்*

அன்புகாட்ட வேண்டும் என்று கூட இயேசு அறைகூவல் விடுத்தார் (மத். 5:43-48).

கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என்ற வகையில் சபை யானது அதன் தலைவரின் தலைமைத்துவத்தைப் பின்பற்ற வேண்டியதாயிற்று (கொலோ. 1:18); ஆகையால், நடபடிகளில் தொடக்கம் பெற்ற ஆவிக்குரிய புதிய பொருளாதாரமானது சகோதர அன்பைப் பற்றிய கர்த்தருடைய போதனைகளைப் பின்பற்றும்படியாக எதிர்பார்க்கப்பட்டது. இந்த சகோதர அன்பில் இருந்த உதாரத்துவ அக்கறையானது விதிவிலக்குப் பெற்றிருக்கவில்லை.

## முதலாவது நிகழ்ச்சி:
## தேவையில் இருந்த ஒரு சபை

அப். 2:41 மற்றும் 4:4ன்-படி, அப். 2:9-11ல் குறிப்பிடப் பட்ட பதினைந்து நாடுகளிலிருந்து வந்திருந்து புதிய கிறிஸ்தவர் களாயிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் 1:15ல் உள்ள, 120 சீஷர் களுடன் மற்றும் அப்போஸ்தலர்களுடன் (சபையில்) சேர்க்கப் பட்டிருந்தார்கள். இந்தப் பார்வையாளர்கள் தாங்கள் திட்ட மிட்டிருந்ததற்கும் அதிகமான காலம் எருசலேமில் தங்கி னார்கள், அவர்களுக்கு உணவும் மற்ற வசதிகளும் தேவைப் பட்டது. எதிர்பார்ப்புக்கும் மேலான நீண்ட காலம் அவர்கள் எருசலேமில் தங்க வேண்டியிருந்ததால், புதிதாய் மனமாற்றம் அடைந்த இவர்களில் சிலர் கிறிஸ்தவர்களானதால் தங்கள் சொந்தக் குடும்பங்களில் இருந்து விலக்கி வைக்கப் பட்டிருந் திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. பலர் தங்களுடைய உடைமைகளை விற்று, அந்தத் தொகையை “அப்போஸ்தலரின் பாதத்தில்” வைத்தார்கள் (அப். 4:35). “அப்போஸ்தலரின் பாதம்” என்பது அந்தக் குழுவின் நிதித் தொகையை விவரிப் பதற்கு லூக்கா கையாண்ட வழிமுறையாகும். இன்றைய நாட்களில் ஒருவேளை நாம் சபைக் கருவூலம் அல்லது ஒரு வங்கிக் கணக்கு என்று இதைக் குறிப்பிடலாம். தேவையில் இருந்த யாவருக்கும் விநியோகம் நடைபெற்றது (அப். 2:44, 45).

இந்தச் சூழ்நிலையை விளக்கப்படுத்துவதற்கு மிக மேலான எச்சரிக்கையானது செயல்படுத்தப்பட வேண்டும். எருசலேமில்

இருந்த கிறிஸ்தவர்கள் ஒரு பொதுவுடைமைச் சமுதாயத்தை நிலைநாட்டி, அந்தக் குழுவுக்கே எல்லா உடைமைகளும் உரிமையாக்கப்பட்டதாகவும், தனிநபர்கள் அல்லது குடும்பங்கள் தங்களுக்கென்று எந்த உடைமைகளையும் வைத்துக் கொள்ளவில்லை என்றும் சிலர் வாதிடுகின்றார்கள். இந்த வாதமானது ஒரு கம்யூனிஸ சமுதாயத்தை விவரிக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டில், எல்லா உடைமைகளும் சபைக்கு உரிமையாக்கப்பட்டு, எல்லாச் செலவுகளும் குழுவாக மேற்கொள்ளப்பட்டு செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இருப்பினும், லூக்காவின் விவரிப்புக்கு இது ஏற்புடையதாய் இருப்பதில்லை. இந்தக் கிறிஸ்தவர்கள், "சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்து" (அப். 2:44), "காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று" மற்றும் "எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்து" (அப். 2:45) இருந்தாலும், அவர்களின் விற்பனை மற்றும் பகிர்ந்து கொடுத்தல் என்பது "ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாகவே" (அப். 2:45) இருந்தது. தேவைகள் சந்திக்கப்பட்ட பொழுது, விற்பதும் பகிர்ந்து கொள்வதும் ஒழிந்து போயின என்பதைப் பலர் மறந்து விடுகின்றார்கள். எருசலேமின் இந்தக் குடிமக்கள் தங்களுடைய சொத்துக்கள் மற்றும் உடைமைகளாய் இருந்த எல்லாவற்றையும் கொடுத்துவிடவில்லை, ஆனால் தேவைகள் நிறை வேற்றப்படும் வரையிலும் அவர்கள் தியாக உணர்வுடன் கொடுத்தார்கள், விநியோகச் செயல்பாட்டிலும் இதே விதமான கொள்கையே வெளிப்படுத்தப்பட்டுள்ளது: உடைமைகளை விற்ற பிறகு, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து, "அப்போஸ்தலருடைய பாதத்திலே" வைத்தார்கள், விநியோகமானது "அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப்" பகிர்ந்து கொடுக்கப்பட்டது (அப். 4:35). தேவைகள் நிறைவேற்றப்பட்டு, ஏற்றத் தாழ்வுகள் திருப்திப்படுத்தப்பட்ட போது, கிறிஸ்தவர்கள் அதற்குப் பின்னும் தங்கள் உடைமைகளை விற்றுக் கொண்டிருக்கவில்லை. தேவைகள் ஒழிந்த பொழுது, விற்பதும் ஒழிந்தது.

இன்னமும் பலர் நடபடிகளின் பிற்பகுதியில் சொந்த உடைமைகள் உள்ளவர்களாய் இருந்தார்கள். இந்த வேளையில் அனனியாவும் சப்பீராளும் தங்கள் உடைமையை விற்று விடாமல், பின்னொரு வேளை காத்திருந்தார்கள்

*(அப். 5:4). மேலும், அவர்கள் தங்களின் உடைமையைத் தங்களிடமே வைத்துக் கொண்டே தேவனைப் பிரியப்படுத்து பவர்களாய் இருந்திருக்க முடியுமென்று அவர்களிடத்தில் பேதுரு கூறினார் (அப். 5:4). தோல்பதனிடுகிறவரான சீமோன் என்ற இன்னொரு மனிதர் யோப்பாவில் தமக்குச் சொந்தமாக ஒரு வீட்டை வைத்திருந்தார் (அப். 9:43; 10:6) அதில் தங்கும்படி அவர் பேதுருவை வரவேற்றார். யோவான் மாற்குவின் தாயாகிய மரியாள் தனது வீட்டை விற்கவில்லை; பேதுரு சிறை வைக்கப்பட்டபோது, பெண்களுக்கான விசேஷ ஜெபக் கூட்டத்திற்கு அது பயன்படுத்தப்பட்டது (அப். 12:12). சில வருடங்களுக்குப் பிறகும் கூட மினாசோன் என்பவர் எருசலேமில் தமக்கு ஒரு சொந்த வீட்டை வைத்திருந்தார், பவுலுடன் மூன்றாம் ஊழியப்பயணம் செய்து திரும்பியிருந்த குழுவை அவர் அங்கு வைத்துத்தான் உபசரித்தார் (அப். 21:16).*

*ஆகையால், கிறிஸ்தவர்கள், கம்யூனிஸ அடிப்படையில் எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அநுபவிக்கவில்லை. அவர்கள் தங்கள் உடைமைகள் யாவற்றையும் உள்ளூர் சபைக்குக் கையளித்து விட்டு, பொதுக் கருவூலத்திலிருந்து உதவி பெற்று வாழும்படி கேட்டுக் கொள்ளப்படவில்லை. அதிகாரம் 2ல் எழுந்த தேவைகள் சற்றுக் காலம், சில மாதங்கள் கூட தொடர்ந்திருக்கும். அதிகாரம் 4ல் நிறைவேற்றப்பட்ட தேவைகளுக்கும் கூட இதுவே உண்மையாகும். தேவைகள் பெருகியிருந்த வரைக்கும், புதிய கிறிஸ்தவர்கள் தங்கள் உடைமைகளை விற்கச் சித்தமாய் இருந்தார்கள்.*

*உபகாரம் செய்தல் என்பது தன்னார்வமுடையதாகவும், கிறிஸ்தவ அன்பு மற்றும் தேவையில் இருந்த சகோதரர்களின் மேல் உள்ள அக்கறை ஆகியவற்றால் தானாக ஊற்றெடுத்து வெளிப்பட்டதாகவும் இருந்தது. சகோதரத்துவம் மற்றும் ஐக்கியம் ஆகியவற்றின் புதுப் பிணைப்பால் ஆன ஆவியில் இக்கொடைகள் தரப்பட்டன. கிறிஸ்துவுக்குள் அவர்கள் கொண்டிருந்த பொதுவான ஆர்வம்தான் வழக்கத்திற்கு மாறான இப்படிப்பட்ட பெருந்தன்மையை ஒளிர்வித்தது.*

*இப்படிப்பட்ட உதார குணமானது யூத நகரத்தில் மிகவும் வழக்கத்திற்கு மாறானதாகவும், குறிப்பிடத் தக்கதாகவும் இருந்தது, லூக்கா இதை, "அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது" (அப். 4:33) என்று கூறினார்.*

*அவர்களைச் சுற்றிலுமிருந்த மக்கள் இந்தச் செயல்பாடு களினால் திகைப்படைந்திருக்க வேண்டும். அனனியாவும் சப்பீராளும் தங்களின் கொடையைப் பற்றிப் பரிசுத்த ஆவியானவரிடம் பொய் சொன்னபொழுது கர்த்தரால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது (பேதுரு வல்ல, கர்த்தரே இத்தண்டனையை விதித்தார்), அப்போது சபையாருக்கு மட்டுமின்றி, "இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும்" (அப். 5:11) மிகுந்த பயமுண்டாயிற்று. உபகார உதவியைக் கையளிப்பதன் மீதான இம்மரண தண்டனைகள், அப்போஸ்தலர்களின் பொதுவான போதனை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூடப் பயப்படுமளவுக்கு எருசலேமில் இருந்த பலர் மேல் அப்படிப்பட்டதொரு செயல் தாக்கத்தை ஏற்படுத்தின (அப். 5:13); ஆனால் அப். 5:14ல், "திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்" என்று கூறப்படுகின்றது. பழைய யூத இருதயங்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாயிருந்தது.*

## இரண்டாவது நிகழ்ச்சி: தேவையில் இருந்த விதவைகள்

*விதவைகளுக்குத் தொடர்ந்து தேவைகள் இருந்தன, இவர்களுக்கான ஊழியங்களைக் கவனிப்பதற்கு ஏழு மனிதர்களை (இவர்கள் அப்போஸ்தலர்கள் அல்ல) நியமித்த தன் மூலம் சில ஒழுங்கீனங்கள் நேராக்கப்பட்டன (அப். 6:1-6). இந்நிகழ்ச்சியும் கூட எருசலேமின் குடிமக்களைத் தனிப்பட்ட வகையில் பாதித்தது. விதவைகளை மனக்கனிவுடன் ஜாக்கிர தையுடனும் போஷித்த இந்த நிகழ்ச்சியானது உடனடியாகத் தொடர்ந்து, சீஷர்களின் தொகை இன்னும் அதிகமாய்ப் பெருகுவதற்கும், யூத ஆசாரியர்களில் பலரும் கூடச் சீஷர்களாவதற்கும் காரணமாயிற்று என்று லூக்கா கூறினார் (அப். 6:7).*

*அதிகாரம் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள பெந்தெகொஸ்தே அனுபவங்களுக்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகே இந்த நிகழ்ச்சி நடந்ததாகக் கல்வியாளர்கள் பலர்*

கருதுகின்றார்கள். இவ்விஷயத்தில் அப்போஸ்தலர்கள் போதுமான அளவு முன் கண்ணோட்டம் செலுத்தியிருந்த தில்லை, ஆனால் தேவபக்தியுள்ள மற்ற மனிதர்களை இவர்கள் பயன்படுத்திக் கொண்டது முக்கியமான பல கொள்கைகள் உதயமாகக் காரணமாயிற்று.

முதலாவதாக, வசனத்தைப் போதித்தல் என்பது மிக உயர்ந்த முக்கியத்துவம் வாய்ந்ததாயிற்று. இரண்டாவதாக, தேவையில் இருந்தவர்களுக்கு உதவுதல் என்பது முக்கிய மானதாய் இருந்தாலும், சுவிசேஷத்தைப் போதிப்பதைக் காட்டிலும் இது குறைவான முக்கியத்துவமுடையதாகவே இருந்தது. மூன்றாவதாக, தகுதியுள்ள, தேவபக்தியுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சபைக்குள் உள்ள பல பணிகள் (ஊழியங்கள்) ஒப்படைக்கப்பட முடியும். நான்காவதாக, ஒவ்வொரு சபையிலும் இவ்வகையான ஊழியத்தைச் செய்யத் தகுதியுடைய ஆண்களும் பெண்களும் இருக்கின்றார்கள். ஐந்தாவதாக, சபையார் தங்களுக்குள் உள்ள சரீரப் பிரகார மான தேவைகளைத் தாங்களே கவனித்துப் பூர்த்தி செய்து கொள்ளும் பொழுது, சமுதாயத்தில் அதற்குக் கிடைக்கும் செல்வாக்கு முக்கியத்துவமானதாய் உள்ளது. ஆறாவதாக, இந்த உதாரணமானது தொடர்ந்து வந்த மற்ற எல்லா சபைக்கும் கர்த்தருக்கென்று தங்கள் ஊழியத்தை நன்முறையில் செய்யும் விருப்பத்திற்கான நல்லதொரு முன்மாதிரியாய் பயன் படுகின்றது.

## மூன்றாவது நிகழ்ச்சி: தேவையில் இருந்த சபைகள்

அகபு என்ற பெயரையுடைய தீர்க்கதரிசியொருவர் உலக முழுவதிலும் வருவதாயிருந்த பஞ்சம் ஒன்றைப் பற்றித் தீர்க்கதரிசனம் கூறினார் (அப். 11:28), இந்தப் பஞ்சம் கிலவுதியு ராயனுடைய நாட்களில் உண்டாயிற்று என்று லூக்கா பதிவு செய்தார். கிலவுதியு இராயனுடைய ஆட்சிக் காலத்தின்போது நான்கு பஞ்சங்கள் உண்டாயிற்று; அவைகளில் மூன்று, ரோமாபுரியையும் கிரேக்கத்தையும் பாதித்தன, ஒன்று பலஸ்தீனத்தைப் பாதித்தது. கி.பி. 45ம் ஆண்டளவில்

யூதேயாவில் ஏற்பட்ட இப்பஞ்சமானது, இம்மூன்றாவது நிகழ்ச்சி சபை தொடங்கிப் பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின் நடந்ததைக் காட்டுகின்றது.

எருசலேமில் எழுந்த தேவைகளுக்கு, அந்தியோகியாவில் இருந்த சகோதரர்கள் விரைவாகவும், பெருந்தன்மையுடனும் பதில்செயல் செய்தார்கள் (அப். 11:30). உதவி செய்யும் பொறுப்பைச் சபையிலிருந்த போதுமான சகோதரர்கள் ஏற்றுக் கொண்டார்கள், "அவரவர்" என்ற உள்ளடக்கும் சொல்லாக் கத்தை லூக்கா இவ்விடத்தில் பயன்படுத்தினார். ஒவ்வொரு உறுப்பினரும் ஏற்ற விகிதத்தில் உதவி செய்தார்கள், தேவனு டைய நிறுவன அமைப்பிற்கு சபையாரின் மரியாதையானது, அவர்கள் மூப்பர்களுக்கு பணத்தை அனுப்பிதன் மூலம் காண்பிக்கப்பட்டது. இப்பணம் "மூப்பர்களின் பாதத்தில்" வைக்கப்பட்டதென்று ஒருவர் கூறலாம். அது எப்படி விளக்கப்படுத்தப்பட்டிருப்பினும், அப்பணமானது அந்தி யோகியாவிலிருந்து எருசலேமில் இருந்த சகோதரர்களுக்குக் கொடுக்கப்பட்டது, ஆனால் பண விநியோகமானது மூப்பர் களின் கைகளில் இருந்தது என்பது மறைமுகமான கருத்தாய் உள்ளது. பர்னபா மற்றும் சவுல் என்ற மாபெரும் பிரசங்கியார் கள் இருவரும் இந்தக் கொடைகளை கொடுப்பதற்காகத் தங்களின் போதனை நடவடிக்கைகளை இடைநிறுத்திச் சென்று உதவினார்கள் (அப். 11:30).

யூதக் கிறிஸ்தவர்களில் சிலர் சீரியாவின் அந்தியோகியாவில் இருந்த புறஜாதியினரிடம் செல்லத் தொடங்கியிருந்தாலும் (அப். 11:20) அங்கு அவர்கள் மாபெரும் வெற்றியடைந் திருந்தாலும், யூதக் கிறிஸ்தவர்கள் இன்னமும் சுவிசேஷத்தை யூதர்கள் தவிர மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கத் தயக்கம் காட்டி வந்தார்கள் (அப். 11:19). புது உறுப்பினர்களுக்கு உதவு வதற்காக எருசலேமின் சகோதரர்கள் பர்னபாவை அனுப் பினார்கள், பர்னபா இவ்வூழியத்தில் (தமக்கு) உதவியாய் இருக்கப் பவுலைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார் (அப். 11:21-26). பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவில் ஒரு வருடத்திற்கும் சற்று அதிகமான காலம் ஊழியம் செய்தார்கள், யூதர் மற்றும் புறஜாதியார் கலந்திருந்த கர்த்தரின் இந்த சபைதான் முதல்முதல் ''கிறிஸ்தவர்கள்'' என்ற பெயர் பெற்றதாயிருந்தது. சுவிசேஷத்தின் உலகளாவிய தன்மையைச்

*சபைகள் பயன் படுத்தும் வரையிலும் "கிறிஸ்தவர்கள்" என்ற சொற்றொடரானது பயன்படுத்தப்படாமல் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

*பின்னாளில் பவுல், யூதேயாவிலிருந்த சகோதரருக்குப் பொருள் சகாயம் செய்யும்படி ரோமாபுரியிலிருந்த சகோதரர்களிடத்தில் வேண்டிக் கொண்டார் (ரோமர் 15:26, 27). எருசலேமில் இருந்த சகோதரர்கள் ரோமாபுரியில் இருந்த புறஜாதியாரான சகோதரர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததன் மூலம் அவர்களின் ஆவிக்குரிய தேவைகளை நிறைவேற்றியதால், அந்தப் புறஜாதி சகோதரர்கள் யூதேயாவில் இருந்த யூத சகோதரர்களின் சரீரத் தேவைகளை நிறைவேற்றுவது அவர்களின் உரிமையாகவே உள்ளது என்று பவுல் மறைமுகமாகக் குறிப்பிட்டார். உபகார உதவி/உதாரகுணம் என்பது ஆவிக்குரிய வகையிலும் மாபெரும் செயல் விளைவைப் பெற்றிருக்க முடியும்!*

## *நான்காவது நிகழ்ச்சி: மறுபடியும் தேவையில் இருந்த சபைகள்*

*பவுல் மூன்றாவது ஊழியப் பயணத்தை முடித்து விட்டு எருசலேமுக்குத் திரும்பினார். அவர் பிரார்த்தனை செய்து கொண்ட நான்கு இளைஞர்களின் சுத்திகரிப்புச் சடங்கை நிறைவேற்றும்படி (செல்லும் செலவையும் ஏற்றுக் கொள்ளும் படி) மூப்பர்கள் தமக்கிட்ட கட்டளையைத் தடையின்றி ஏற்றுக் கொண்டு எருசலேம் தேவாலயத்திற்குச் சென்ற பொழுது எபேசு நகரத்தைச் சேர்ந்த துரோப்பீமு என்ற புறஜாதியாரைத் தம்முடன் கூட்டிச் சென்றார் என்று யூதர்கள் யூகித்தார்கள் (அப். 21:17-29). அவர் (பவுல்) கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டார், பின்பு செசரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவர் தேசாதிபதியாயிருந்த பேலிக்ஸ் (அப். 23:24) மற்றும் பிரதான ஆசாரியராயிருந்த அனனியா ஆகியோரின் முன்னிலையில் விசாரிக்கப்பட்டார் (அப். 24:1). கலகக்காரரான இந்த யூதர்கள் எருசலேமிலிருந்து தங்களுடன் அழைத்து வந்திருந்த தெர்த்துல்லு என்ற*

*நியாயசாதுரியவான் பவுலைக் குற்றம் சாட்ட உதவி, பவுலைக் கலகக்காரர் என்று குற்றம் சாட்டினார் (அப். 24:2, 5).*

*ரோம அரசுக்கு விரோதமாய்க் கலகம் விளைவித்ததாகத் தம் மேல் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பவுல் பதில் தருகையில், தாம் எருசலேமுக்கு வந்து பன்னிரெண்டு நாள் மாத்திரமே ஆகியிருந்ததென்றும், தம் ஜனத்தாருக்குத் தர்மப் பணத்தையும் காணிக்கையையும் ஒப்புவிப்பதற்காகவே தாம் எருசலேமுக்கு வந்திருந்ததாகவும் கூறினார் (அப். 24:11, 17). தேவையில் இருந்த தம் இனத்தாருக்கு உதவுவதில் மட்டுமே தான் ஈடுபட்டிருந்ததாகவும், எந்த ஒரு கலகத்தையும் தூண்டவில்லை என்றும் - அத்துடன் எருசலேமில் தாம் இருந்த ஐந்து நாள் அவகாசமானது கலகத்தைத் தூண்டுவதற்குப் போதுமானதாயிருந்ததில்லை[1] என்றும் - கூறினார்.*

*எருசலேமுக்குத் தாம் கொண்டு வந்திருந்த தர்மப்பணம் மற்றும் காணிக்கைகளைப் பற்றிப் பேசியபோது பவுல், அநேக வருடங்களாக காணிக்கைப் பணமானது உபகார உதவிக்காக வைக்கப்பட்டிருந்தது என்று மேற்கோள் காட்டினார். இந்தத் தேவையைப் பற்றியும் இதை நிறைவேற்றுவதில் ஈடுபடுவது எப்படி என்பது பற்றியும் ஏற்கனவே கலாத்தியா நாட்டு சபைகளுக்குப் பவுல் போதித்திருந்தது போலவே கொரிந்தியர்களுக்கும் அவர் எழுதியிருந்தார் (1 கொரி. 16:1, 2). இக்கொடைகளைத் தருவதில் கொரிந்தியர்களின் வாக்குறுதியைப் பற்றிப் பவுல் ஓராண்டுக்குப் பிறகு நினைவூட்டியிருந்தார் (2 கொரி. 9:1, 2), அப்பொழுது அவர்களின் முயற்சியை நிறைவு செய்யும்படியும் அவர் கேட்டுக் கொண்டார் (2 கொரி. 8:10-12; 9:3-5). பணத்தைக் கையாளுவதில் எழக்கூடிய எந்த ஒரு விமர்சனத்தையும் தவிர்ப்பதற்காக அவர், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அவர்களது கொடைகளை நிறைவேற்றுவதில் அவர்களுக்கு உதவுவதற்காகப் பவுல், தீத்துவையும் இன்னொரு சகோதரனையும் அனுப்பியிருந்தார் (2 கொரி. 8:16-24).*

*மூன்றாம் ஊழியப் பயணத்தின் போது, ஆசியா, அகாயா மற்றும் மக்கெதோனியாவில் இருந்து திரும்புகையில் பவுலுடன் துணைக்கு ஏழு மனிதர்கள் வந்தார்கள் (அப். 20:4, 5). பெரும்பாலும் தங்கம் மற்றும் வெள்ளிக் காசுகளாய் இருந்த இந்த தர்மப்பணம் மற்றும் காணிக்கைகளைக் கொண்டு செல்வதில் இவர்கள் (பவுலுக்கு) உதவியாய்*

இருந்தார்கள். பணம் சேகரித்தலானது குறைந்தது இரண்டாண்டுகளாவது தொடர்ந்து நடைபெற்றிருந்தது என்பதால், பவுல் தாமே தனியாகவோ அல்லது ஓரிரு துணையாளர்களுடன் கூடவோ அந்த நாணய மூட்டைகளைத் தூக்கிச் செல்ல முடியாதிருந்தது. இப்பயணத்தின் போது பவுலுக்கு எதிராகச் சதியொன்று திட்டமிடப்பட்டிருந்தது, ஒருவேளை இது ஏற்கனவே சேகரிக்கப்பட்டிருந்த இப்பணத்தைக் களவாடிச் செல்வதற்காகத் திட்டமிடப் பட்டிருக்கலாம் (அப். 20:3). எனவே பவுல் வழக்கத்திற்கு மாறாகச் செயல்பட்டார், அதாவது அவர் தமது துணையாளர் களைக் கப்பலில் விட்டுவிட்டு, துரோவாவிலிருந்து ஆசோ பட்டணம் வரைக்கும் கரை வழியாய்ப் பயணம் செய்தார் (அப். 20:13, 14). தம்மைத் திருடர்கள் யாரும் பின்தொடர்ந் தால், அவர்களைக் குழப்புவதற்காக அவர் இந்த வேலையைச் செய்திருக்கலாம்.

இந்த மூன்றாம் பயணத்தின்போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கொடைகள் நிறைவு செய்யும்படியான புத்திமதிகள் உள்ளடங்கிய 2 கொரிந்தியர் நிருபத்தைப் பவுல் எழுதினார். ரோமருக்கு நிருபத்தையும் இந்தப் பயணத்தின் போதுதான் அவர் எழுதினார். அதில் எருசலேமின் பரிசுத்த வான்களுக்குச் செய்யும் இந்த ஊழியத்தின் தேவையைப் பற்றி அவர் குறிப்பிட்டார் (ரோமர் 15:25, 26). ஆகையால் கி.பி. 58-59ம் ஆண்டுகள் அளவில், உதார குணத்திற்கான இன்னொரு நிகழ்ச்சியை நாம் சபையில் காணுகின்றோம்.

## முடிவுரை

அன்பின் உதார குணமானது ஆதி சபையின் முக்கிய குணங்களில் ஒன்றானது. ஒவ்வொரு சபையும் தனக்குள் ஏற்பட்ட தேவைகளை நிறைவேற்றப் பொறுப்பேற்றுக் கொண்டது, மற்றும் வேறு இடங்களில் எழுந்த தேவை களுக்குப் பதில்செயல் செய்யவும் கிறிஸ்தவர்கள் தயாரா யிருந்தார்கள். முதலாம் நூற்றாண்டானது கொடூரமான தாகவும், மோசமானதாகவும் இருந்தது. ஆனால் சகோதரரு டைய தேவைகளை நிறைவேற்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கிறிஸ்தவர்கள் எழுந்து நின்றார்கள்.

*கிறிஸ்தவர்கள் நன்மை செய்வதற்குத் தனிப்பட்ட வாய்ப்புகள் பலவற்றைப் பெற்றுள்ளார்கள் (கலா. 6:10), ஆனாலும் சபைகளுக்கு இன்னமும் பொறுப்புக்கள் உள்ளன. இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் சபையின் குழு ஊழியத்திற்கென்று தாராளமாகவும், கிரமமாகவும் கொடுக்க முடியும் அத்துடன் தனிப்பட்ட அறைகூவல்களையும் நிறை வேற்ற முடியும். கர்த்தர் தமது சபையை உதாரகுணம் உள்ள சமூகமாகவே வடிவமைத்தார், ஒவ்வொரு சபையும் இந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றப் போதுமான அளவு பெற்றுள்ளதாகவே இருக்கின்றது.*

*ஆதிக்கிறிஸ்தவர்கள், தேவ அன்பு மற்றும் பிறரன்பு/ சகோதர அன்பு ஆகியவற்றால் தாங்கள் அறியப்பட வேண்டும் என்ற கர்த்தரின் விருப்பத்தை நிறைவேற்றினார்கள் (யோவா. 13:34, 35). "முழு இருதயத்தோடு காட்டப்படும் உதார குணத்தைக் காட்டிலும் சிறந்த பிரசங்கம் எதுவும் இல்லை"*[2] *என்று* J. W. *மெக்கார்வி அவர்கள் கூறினார்.*

---

*குறிப்புகள்*

[1]*இப்பன்னிரெண்டு நாட்களில் இரண்டு நாட்களைப் பவுல் பயணத்தில் செலவிட்டிருந்தார் (அப். 23:31, 32), மற்றும் ஐந்து நாட்களைச் சிறையிலும், எருசலேமிலிருந்து அனனியா வருவதற்காகக் காத்திருப்பதிலும் செலவிட்டார் (அப். 24:1). மீதம் ஐந்து நாட்கள் மட்டுமே விடப்பட்டன - கலகத்தைத் தூண்டுவதற்கு நிச்சயமாக இந்த நாட்கள் போதுமான கால அவகாசம் அல்ல.* [2]J. W. McGarvey, *New Commentary on Acts of the Apostles* (Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 230.